தகவல் சட்டம் 2005

அறிவும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள். 01.09.2026</u>

## <u>முன்னிலை</u>

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 19808/F/2023</u>**

திரு.பெ.ஏழுமலை, -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
உளுந்தூர் பேட்டை ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 107.

******

## <u>ஆணை</u>

இவ்வாணையம் 21.07.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.சு.மணி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் 01.09.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தில், தான் உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) ஆக பணிபுரிந்த நிலையில் திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டு முதுகு தண்டு வடம் அறுவை சிகிச்சை செய்து கடந்த 03.06.2026 முதல் மருத்துவ விடுப்பில் இருந்ததாகவும், மனுதாரர் கோரிய காட்டு எடையார் ஊராட்சி தொடர்பான தகவலை குறித்த காலத்திற்குள் தகவலினை வழங்கிவிட்டு அதன் நகலினை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு இவ்வலுவலக கோப்பின் வழியாக (இவ்வலுவலக கோப்பு எண்.ஆ2/1212/2023) உதவி பொதுத் தகவல் அலுவலர்/ ஊராட்சி செயலர், காட்டு எடையார் ஊராட்சி என்பவருக்கு தகவல் அளிக்கப்பட்டும் தொடர்ந்து தகவல் வழங்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கப்பட்டு வந்த நிலையில் 13.09.2024 பிற்பகல் அன்று சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு

பணியிட மாறுதல் வரப்பெற்றன என்பதையும் தற்போது சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு பணியிட மாறுதல் வரப்பெற்றன என்பதையும் தற்போது மனுதாரர் கடந்த 20.07.2026 அன்று காலை 11 மணியளவில் அலுவலகத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டு முழுமையாக தகவலினை பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்த அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- ✓ **இன்றைய விசாரணையில் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்த அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை. மேலும், மனுதாரரின் 04.09.2023 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு குறித்து தகவல்களை வழங்குமாறு ந.க.எண்.ஆ2/1212/2023, நாள் 04.10.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக உதவி பொதுத் தகவல் அலுவலர்/ ஊராட்சி செயலர், காட்டுஎடையார் ஊராட்சி அவர்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் கடிதம் அனுப்பப்பட்டும் தகவலை வழங்காத உதவி பொதுத் தகவல் அலுவலர்/ ஊராட்சி செயலர் (04.10.2023 தேதிய), காட்டு எடையார் ஊராட்சி ஒன்றியம், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கம் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (04.09.2023 தேதிய) திருமதி.செ.லோகேஸ்வரி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), உளுந்தூர் பேட்டை ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களின் திருத்திய எழுத்துமூல விளக்கம் ஆகியவற்றினை இணைத்து 16.09.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் உதவிப் பொதுத் தகவல் அலுவலர் (04.10.2023 தேதிய), ஊராட்சி செயலர், காட்டுஎடையார் ஊராட்சி ஒன்றியம் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 19808/F/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
உளுந்தூர் பேட்டை ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 107.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (04.09.2023 தேதிய)**
**திருமதி.செ.லோகேஸ்வரி,**
**துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ),**
**உளுந்தூர் பேட்டை ஊராட்சி ஒன்றியம்,**
**கள்ளக்குறிச்சி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**உதவிப் பொதுத் தகவல் அலுவலர் (04.10.2023 தேதிய),**
**ஊராட்சி செயலர்,**
**காட்டுஎடையார் ஊராட்சி ஒன்றியம்,**
**உளுந்தூர் பேட்டை வட்டம்,**
**கள்ளக்குறிச்சி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.பெ.ஏழுமலை,
வடக்கு தெரு,
காட்டு எடையார் அஞ்சல்,
உளுந்தூர்பேட்டை வட்டம்,
ஜி.அரியூர் (வழி),
கள்ளக்குறிச்சி மாவட்டம்-605 751.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).
Copy to: File NS/PA-